



தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்துள்ள வரலாறு காணாத கனமழை காரணமாக, வெள்ளம் சூழ்ந்துள்ள முத்தாலம்மன் காலனி, ஸ்டேட் பேங்க் காலனி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களை மீட்கின்ற பணிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அமைச்சர்கள், அதிகாரிகள் அலுவலர்களுடன் இணைந்து ஒருங்கிணைத்தார். காவல்துறை தீயணைப்பு படை, கடலோர பாதுகாப்புக் குழுமம், பேரிடர் மீட்புக் குழுவினர் முழுவீச்சில் மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், நீர் சூழ்ந்துள்ள பகுதிகளில் வசிப்போருக்கு உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்ய அதிகாரிகள், அலுவலர்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தினார்.




தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் வெள்ளம் சூழ்ந்த நிலையில், அந்தப்பகுதிக்குச் சென்று அங்கு சிகிச்சை பெற்று வருவோர் மற்றும் அவர்களின் குடும்பத்தாரிடம் அங்குள்ள நிலை குறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார். மேலும், வெள்ளம் காரணமாக சிகிச்சை தடைபடாமல் இருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மருத்துவமனைப் பணியாளர்களைக் கேட்டுக் கொண்டார். மேலும், நோயாளிகள் சிகிச்சைக்காக வருகிற போதும், சிகிச்சை முடிந்து திரும்புகிற போதும் அவர்கள் வெள்ள நீரில் சிக்காமல் பாதுகாப்பாக வெளியேறும் வகையில் படகினை வைத்திருக்கும்படி அரசு அதிகாரிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டார். அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கீதா ஜீவன், ஆர்.எஸ்.இராஜ கண்ணப்பன் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.



தூத்துக்குடி மாநகரில் பெய்த கன மழையால் பல்வேறு பகுதிகளில் வீடுகளை தண்ணீர் சூழ்ந்துள்ளது. எனவே அங்கிருந்து மீட்கப்பட்ட மக்கள் பாதுகாப்பாக நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பழைய பேருந்து நிலையத்தில் உள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதிய உணவு வழங்கினார். அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, ஆர்.எஸ். இராஜகண்ணப்பன், உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.




தென் மாவட்டங்களில் இயல்பைவிட அதிகமாக பெய்த கனமழை காரணத்தால், தூத்துக்குடி மாவட்டத்தில் மிகப்பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில், தூத்துக்குடி மாநகரில் நடைபெற்று வரும் மீட்பு பணிகளை நேற்று முன்தினம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார். தூத்துக்குடி அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை அருகில் வெள்ளம் சூழ்ந்த பகுதியை பார்வையிட்டு, தண்ணீரை அப்புறப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கீதாஜீவன், ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் உள்ளிட்டோர், அப்போது உடனிருந்தனர்.




தூத்துக்குடியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நாடாளுமன்ற கழகக் குழுத் துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு அவர்களுக்கு வேண்டிய நிவாரணப் பொருட்களை வழங்கினார். அதுபோது அமைச்சர் பெ.கீதாஜீவன் உள்பட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



திருநெல்வேலி மாவட்டத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு பெய்த அதிக கனமழையால் பல்வேறு இடங்களில் மழை நீர் சூழ்ந்துள்ளது. நெல்லை சந்திப்பு பேருந்து நிலையத்தில் மழைநீர் புகுந்துள்ள நிலையில் அதன் பாதிப்பை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார். அங்கு தேங்கியுள்ள தண்ணீரை வெளியேற்றவும், கடைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்பை சரி செய்யவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு அதிகாரிகள், அலுவலர்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டுக்கொண்டார். நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், சா.ஞானதிரவியம் எம்.பி. உள்ளிட்டோர் உடனிருந்தனர்.